<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 40/2019</u>

பெயர் : தனஞ்செயன் D.W.1. Cross continuation

த/பெ. : ராமசாமி

தேதி : 05.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> –

1. எனது தகப்பானர் எழுதிவைத்த உயில் ஆவணத்தில் உள்ள பி அட்டவனை சொத்து வாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் பி அட்டவனை சொத்திற்கு பக்கத்திலேயே நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நான்கெல்லை ரோட்டிற்கு கிழக்கு, மாடசாமி நாடார் வகையறா புஞ்சைக்கு தெற்கு, லெட்சுமி அம்மாள் புஞ்சைக்கு மேற்கு, சந்துக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த நான்கெல்லை தவறு. அதில் 8 ஏக்கர் 40 செண்ட்டில் வடபுறம் 2 ஏக்கர் 80 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வடபுறம் என குறிப்பிட்டுள்ளது தவறு.

2. தாவா சி அட்டவனை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால்சரிதான். அதில் மேற்கண்ட நான்கெல்லை காணப்பட்டு நடுபாகம் 2 ஏக்கர் 80 ½ செண்ட் என காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலில் கண்ட சொத்து எனது தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த உயிலில் ஒவ்வொருவருக்கும் வடபாகம், தென்பாகம், நடுபாகம் என ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட நடுபாகத்தை நான் வாதிக்கு பரிவர்த்தனை மூலம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஒதுக்கப்பட்ட வடபாகத்தையும் எனக்கு ஒதுக்கப்பட்ட நடுபாகத்தையும் சேர்த்து வாதி 5 ஏக்கர் 61 செண்ட் ஐ அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1970ம் ஆண்டு எங்கள் குடும்பத்தில் பாகபிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் வாதிக்கு சி அட்டவனை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு உயில் மூலம் கிடைத்த சி அட்டவனை சொத்தினையும் வாதிக்கு பாகபத்திரத்தின் மூலம் கிடைத்த சி அட்டவனை சொத்தினையும் இருவரும் பரிவர்த்தனை செய்துகொண்டோம் என்றால் சரியல்ல.

3. வாதிக்கு பாகபிரிவினை மூலம் கிடைத்த சி அட்டவனை சொத்தில் சர்வே எண். 404/1 மட்டும் என்னிடம் உள்ளது. மற்ற சொத்துகள் என்னிடம் இல்லை.

புல எண் 342/14, 342/15, 342/16, 342/18, மற்றும் 342/19 ஆகிய சொத்துகளை நான் நாச்சிகட்டளை பாலகிருஷ்ணன் என்பவரிடம் கொடுத்து அவர் சாகுபடி செய்து வருகிறார் என்றால் இல்லை. எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சேரந்து தான் கொடுத்தோம். நாச்சிக்கட்டளை பாலகிருஷ்ணனை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளேன் என்றால் எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். நான் தான் மேற்படி சொத்தை நாச்சிகட்டளை பாலகிருஷ்ணனிடம் கிரயம் செய்து கொடுத்துவிட்டு தற்போது குடும்பத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாச்சிக்கட்டளை பாலகிருஷ்ணனை விசாரணை செய்தார் நான் கிரயம் செய்துகொடுத்தது தெரிய வந்துவிடும் என்பதால் நான் அவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நாச்சிகட்டளை பாலகிருஷ்ணனின் மகன் அருள்பிரசாத் என்றால் சரிதான். பாகபிரிவினை மூலம் வாதிக்கு கிடைத்த சொத்தில் நாச்சிக்கட்டளை பாலகிருஷ்ணன் மகன் அருள் பிரசாத் மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி மின்சார வாரியத்தால் வாதிக்கு கொடுக்கப்பட்ட தகவல் என்றால் சரிதான். அது **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 404/3ல் நான் மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 404/1ஐ சுப்பையா என்பவரிடமிருந்து நான் கிரயம் பெற்று அந்த இடத்திற்கு தான் மின் இணைப்பு பெற்றேன். சுப்பையா என்பவரிடமிருந்து நான் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. நான் சுப்பையா என்பவரிடமிருந்து எந்த சொத்தும் கிரயம் பெறவில்லை என்றால் சரியல்ல. வாய் மொழி பரிவர்த்தனையை மறைப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பரிவர்த்தனையாக கொடுத்த சொத்தை நான் எனது மனைவிக்கு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த செட்டில் மெண்ட் ஆவணத்தை அனுசரித்து எனது மனைவி சொத்தினை வசம் எடுத்துக்கொள்வில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ஆன ஆவணம் நான் எனது மனைவிக்கு எழுதிவைத்த செட்டில் மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 1 ெஹக்டேர் 27.5 செண்ட் என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலமானது 9 மா 56 குழி என்றால் சரியல்ல. எனக்கு உயிலின் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தை விட அதிகமாக சொத்தை நான் செட்டில் மெண்ட்ஆவணம் மூலம் கொடுத்துள்ளதால் அந்த ஆவணம்

செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ஆன ஆவணம் 1 ேஹெட்டேர் 27 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு. நான் பிவாசாஆ 1 ஆன ஆவணத்தில் 27 ஏர்ஸ் என குறிப்பிட்டுவிட்டு தற்போது 27 செண்ட் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1ஐ அனுசரித்து நான் எனது மனைவி செந்தில் குமார் என்பவரிடம் பெந்தகம் வைத்துள்ளார். அந்த பெந்தக பத்திரத்தை அனுசரித்து செந்தில் குமார் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அதனால் செந்தில் குமார் பெயரில் தான் சிட்டா மற்றும் அடங்கல் இருக்கும் என்றால் சரியல்ல. பெந்தக பத்திரம்மூலம் சொத்தின் வசம் செந்தில் குமார் வசம்  இருப்பதால் நான் அனுபவித்து வருவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும், எனது அனுபவித்தில் இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. வாதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு 30/2019 என்ற வழக்கை தாவா பி அட்டவனை 1 முதல் 5 அயிட்ட சொ த்துகளை பொறுத்து விளம்பல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் எனது மனைவிக்கு எழுதி வைத்த செட்டில் மெண்ட ஆவணத்தை அனுசரித்து தாவா பி அட்டவனை 1 முதல் 5 அயிட்ட சொத்துகளை ஆக்கிரமிக்க கூடாது என பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு நான் அந்த சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் வாதி நாகப்பட்டிணம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், செம்பனார்கோவில் காவல் நிலையம் ஆகிய இடங்கில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ஆன ஆவணமானது வாதிக்கு பரிவர்த்தனையாக கொடுக்கப்பட்ட சொத்தை மோசடியாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் அந்த செட்டில்மெண்ட்ஆவணம் செல்லத்தக்கதுஅல்ல என்றாலும் அதை அனுசரித்து வசம் எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. உயில்  மூலம் கிடைத்த சொத்தை நான் வாதிக்கு கொடுத்துவிட்டு அவரது பாகபிரிவினை மூலம் கிடைத்த சொத்தை நான் பரிவர்தனையாக எடுத்துக்கொண்டு அதை பாலகிருஷ்ணனுக்கு சாகுபடிக்கு கொடுத்துவிட்டு தற்போது பரிவர்த்தனை  எதுவும் ஏற்படவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே, வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.